செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 1.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ளு புரட்டாதி மீ கஅ உ வெள்ளிக்கிழமை (4-10-1968) [இல-உசு

காந்தியடிகளுடைய உபதேசங்கள் மக்களுக்குத் தேவை

நூற்றாண்டு ஜயந்திவிழா



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் 2-10-68 புதன்கிழமை மாலை 6 மணியளவில் வடமாகாண உதவி அரசாங்கவதிபர் திரு J. M சபாரத்தினம் அவர்கள் தலைமையில் காந்தியடிகள் நூற்றாண்டுவிழா ஆரம்பிக்கப்பட்டது.

தேவாரமோதுதல் வேதாத்தியயனம் வேறும் பக்திப் பாடல்கள் சிறப்பாக நிகழ்ந்தன. உலகிலெங்கணும் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை 1968 அக்டோபர் 2-ந் தேதி தொடக்கம் 1969 அக்டோபர் 2ந் தேதிவரை நடத்த ஐக்கிய நாட்டுத் தேசியச் சபை தீர்மானித்திருக்கின்றது. காந்தியடிகளுடைய வாழ்க்கை உபதேசங்கள் அரசியற்றொண்டு முதலியவற்றைப் பிரசாரஞ் செய்தல், நூல்கள் வெளியிடுதல், தொழிற்சாலைகள் நிறுவுதல் கல்வி நிலையங்கள் அமைத்தல் முதலியன விழாவினுடைய அங்கங்களாயமையும். காந்தியடிகளுடைய தத்துவங்களை மக்கள் உணர்தல் வேண்டும். ஆரம்ப உரையை நிகழ்த்த பாரதநாட்டுத் துறவி இமயஜோதி. ஸ்ரீமத். சுவாமி திலக் மகாராஜ் சுவாமிகள் வந்திருக்கின்றார்கள். சுவாமி விவேகானந்தர் முதலிய ஞானிகள் அறிவுரைகள் நிகழ்த்திய தானத்தில் பாரதநாட்டுத்

(தொடர்ச்சி 2ம பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
கடிதென வந்த கரிதனை
யுரித்து
அவ்வுரி மேனிமேற்
போர்ப்பர்
பிடியனநடையாள் பெய்வளை
மடந்தை
பிறைநுத லவளொடு
முடனாய்க்
கொடிதெனக் கதறுங்
குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு நித்திலஞ்
சுமந்து
குடிதனை நெருக்கிப்
பெருக்கமாய்த்தோன்றுங்
கோணமாமலையமர்ந்தாரே
திருச்சிற்றம்பலம்
— திருஞானசம்பந்த சுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

சூதாடலை விருப்புவாய் ஆயி காலமும் கருத்தும் பெறப்படாமையால் கல்வி, செல்வம், ஊண் உடை என்பன உன்னை அடையாவாம். ——

பழைய பழக்க வழக்கங்கள்

[சம்ஸ்கிருத சாத்திர பாரங்கதரான பிரமஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் கூறுவது]

("யஸ்மின் தேசேய ஆசாரோ வ்யவஹாரः குலஸ்திதி: ததைவ பரிபால் யோஸௌ யதா வசமுபாகத:")

"ஸ்ரீயாக்ஞவல்கியஸ் மிருதியில், ஸ்ரீயாக்ஞவல்கியர் அரசாங்கம் செய்ய வேண்டிய காரியத்தைக் கூறுமிடத்தில் மேற்கண்டவாறு கூறுகின்றார்.

'எந்தத் தேசமாக இருந்தாலும் பலதலைமுறைகளாகச் செய்துவந்த ஆசாரங்களையும் (பழக்கவழக்கங்களையும் வஸ்துக்களுக்கு இட்ட பெயர்களையும்...... அந்த அந்தக் குலத்துக்கு ஏற்பச் செய்துவந்த தர்மங்களையும் காக்கவேண்டிய பிறர் அத்தேசத்தைக் கைப்பற்றிய போதிலும் அங்கு அதுவரை உள்ளபடியே எல்லாவற்றையும் வைத்திருக்க வேண்டும்" எனக்கூறியுள்ளார்.

மநு முதலிய மற்ற முனிவர்களும், "அரசன் வேறு தேசத்தைத் தனக்குவசமாக்கிக்கொண்டாலும் அந்தத் தேசத்தில் உள்ள பெயர்கள், வழக்கமாகவந்த தர்மங்கள் முதலியவற்றை மறுக்கக்கூடாது" என்று கூறியுள்ளனர். "பிறதேசத்தை வசப்படுத்த முயன்றபோது அந்தத் தேசத்தின் பழக்கவழக்கங்களைத் தெரிந்தோ தெரியாமலோ அரசன் கெடுத்திருந்தாலோ, மாற்றியிருந்தாலோ அந்தத் தேசத்தை வசப்படுத்திய பிறகு முன்பு இருந்தவாறே ஸ்தாபிக்க வேண்டும்" என்றும் கூறியுள்ளார்". ஆதாரம் 15-9-68 கல்கி.

தீக்ஷிதர் அவர்கள் காட்டிய முனிவர்களின் வாக்குக்களைச் சீர்திருத்தக்காரர்கள் சிந்திக்கடவர்கள்.

— "ஒரு சைவன்"

நேயர்கள் நெஞ்சம்

சிந்தியுங்கள் செயலாற்றுங்கள்!

நாவலருக்குச் சிலை அமைக்கப்படும் முயற்சி வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து வருகின்றது. சிலை தாபிக்க வேண்டிய இடமும் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டது. மாதிரி உருவப் படமும் சிறப்புற அமைக்கப்பட்டு அனைவர்க்கும் அளிக்கப்பட்டுள்ளது. சிலை அமையும் மணி மண்டபத்தின் மாதிரிப் படமும் உருவாகும் முயற்சிகள் வலுவடைகின்றன. சிலை நிதியும் கடலலை எனப் பெருகுகின்றது. அப்பொன்னாளில் யாழ் நகரில் இன்னோர் புனித நிகழ்ச்சியும் இடம்பெற வேண்டும். யாழ் நகரின் சரித்திரத்தில் ஒரே நாளில் நடைபெற்ற "இருநற் செயல்"கள் என அவை பொன் எழுத்தால் பொறிக்கப்படவேண்டும். அவைதாம் யாவை? "ஒன்று நாவலர் பெருமானின் சிலை நிறுவப்படுதல்; மற்றது யாழ்நகரினின்றும் பசுவதை சட்டபூர்வமாக அகற்றப்படுதல்.

ஏன் பசுவதையை அகற்ற வேண்டும்?

"பசுக்களை இடர்நீங்கக் காக்காதவர்களும் பூசைசெய்யாதவர்களும் காக்காத பாவிகளைத் தண்டியாத அரசனும் நரகத்தில் வீழ்வார்கள்"

இவ்வாறு யார் சொற்றனர்? ஆறுமுக நாவலரவர்கள் தாம் எழுதிய பெரியபுராண சூசனத்து இவ்வாறு கூறியிருக்கின்றனர்.

இடர் நீங்கக்காக்காதவர்கட்கும் பூசை செய்யாதவர்கட்கும் காக்காத பாவிகளைத் தண்டியாதார்கட்கும் நரகம் என்றால் கொலலுபவர்கட்கும் கொல்லுவதைத் தடை செய்யாதவர்கட்கும்-கொல்லுவதற்கு அனுமதியளிப்பவர்கட்கும் ஏற்படுங் கதிதான் யாதோ? சிந்தியுங்கள்! தெளியுங்கள்!!

நாவலர் பெருமான் இன்று உயிரோடு இருந்திருந்தால் யாழ நகரமக்களை நோக்கி "பாவிகாள்! பதகர்காள்! நீங்கள் நகர மக்கள் அல்லர் நரக மக்களேயாவீர்" எனக் கூறி எள்ளி நகையாடமாட்டாரா?

அன்று ஓர் ஆவினை அன்னியன் (போர்த்துக்கேயத் தலைவன்) ஒருவனுக்கு உணவிற்குக் கொடுக்க மறுத்து அதற்காகத் தனது பிறந்த பொன்னாட்டினையே துச்சமென நீத்து இரவிரவாக ஓடத்திலேறி வேற்று (இந்திய) நாட்டிற்குச் சென்ற ஞானப்பிரகாச முனிவரின் பரம்பரையில அவதரித்த நாவலருக்கு —அதுவும் ஆவினத்தை அடிப்பதே அறமன்று என ஆற்றி வந்த நாவலருக்குச் சிலை எழுப்புங்கால ஆயிரமாயிரம் ஆவினை வதைத்து — அவைகளின் அலறலொலியோடா நாம சிலை எழுப்பவேண்டும் சிந்தியுங்கள்! சற்றே சிந்தியுங்கள்!!

நாவலர் பிறந்ததாற் புத்துயிர்பெற்றது சைவமும் தமிழும் சீரும் சிறப்பும் பெற்றது நல்லை நகரும யாழ்ப்பாணமும அவர் பிறந்த பொன்னாட்டில அவருக்குச் சிலையமைக்க முற்படுங்கால அவரால வெறுக்கப்பட்ட -- துரோகமெனக் குறிப்பிடப்பட்ட மிகவுங்கண்டிக்கப்பட்ட — எள்ளி நகையாடப்பட்ட — ஒருசெயல் ஆவதை. எல்லோரும் அதைத்தடைசெய்யாதிருத்தல் பொருத்தமுடையதா? சிந்தியுங்கள்.

(தொடர்ச்சி 2-ம் ஆம் பக்கம்)

அன்பளிப்பு

யாழ்ப்பாணம் மில் வைற் சோப் தொழிற்சாலைத் தாபனத்தார் சென்ற நவராத்திரியை முன்னிட்டு நாமகள் திருவுருவப் படத்தினை (13½" × 10") அன்பளிப்பாக அன்பர்களுக்கு இலவசமாக வழங்கினார்கள். நாமகள் இரு கரங்களில் ஒரு யாழையும் இன்னொரு கரத்தில் செபமாலையும் இன்னொரு கரத்தில் ஓர் ஏட்டையும் தாங்கிய வண்ணம் அருளொழுகும் திருமுகத்துடன் காட்சிதருகின்றார்

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.

MILK WHITE
SOAP
VMK
மில்க்வைற்

மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

இந்து சாதனம்
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்
கீலக ௵ புரட்டாதி கஅ-உ வெள்ளிக்கிழமை [1968]

காந்தியடிகள் நூற்றாண்டு விழா அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் 2-10-68 புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட காந்தியடிகள் நூற்றாண்டு ஜயந்திவிழாவில் இமயஜோதி ஸ்ரீமத் சுவாமி திலக் மஹாராஜ் அவர்கள் சிறந்த விரிவுரையாற்றினர். சுவாமியவர்கள் வடஇந்தியாவைச் சேர்ந்த ஒரு துறவி, இமயமலையடிவாரத்திலிருந்து கன்னியாகுமரிவரை பாதயாத்திரை செய்துள்ளவர். ஷை யாத்திரைக்கு எட்டுவருட காலம் சென்றதாம். இளமை யுடையவர். பார்க்கிறவர்களுடைய உள்ளத்தைக் கவரக்கூடிய தவக்கோலம். காந்தியடிகள் தமது திருக்கரங்களால் சுவாமிகளை ஐந்தாவது பராயத்தில் பரிசித்து ஆசீர்வதித்தனர். ஷை விழா அங்குரார்ப்பணத்தில் விரிவுரையாற்ற மிகப் பொருத்தமானவர். சொற்சோர்வில்லாமல் மிக இலகுவான நடையில் ஆங்கிலத்தில் தமது சொற்பொழிவை யாற்றினர்.

காந்தியடிகளுடைய தெய்வீக வாழ்வைப்பற்றி விரிவாகப் பேசினர். அவருடைய பேச்சின் சாரம்: "காந்தியடிகளுக்குச் சத்தியமே தெய்வம். காந்தியடிகள் மிகவும் மெலிந்த உடம்புடையவர். உடலில் தசைப்பற்றுக் குறைவு. அத்தகைய உடலையுடைய ஒருவர் உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடைய மதிப்பைப் பெற்றமைக்குக் காரணம் அவருடைய தெய்வீக வாழ்க்கையே. அவருடைய ஒழுக்கம் தெய்வீக வாழ்க்கைக்கு உறுதுணையாக விருந்தது. காந்தியடிகள் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதி வாழ்ந்தனர். காந்தியடிகள் அரசியலுக்குத் தெய்வீகத்தை வழிகாட்டியாகக் கொண்டனர். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு இவ்வுபாயமே பெருந்துணையாக விருந்தது. சத்தியாக்கிரகமே அவருடைய ஆயுதம். கத்தியின்றி இரத்தமின்றி பாரதநாட்டிற்குச் சுதந்திரத்தை அது ஈட்டியது. பாரதம் பெற்ற சுதந்திரம் தென்கிழக் காசியா முழுவதும் சுதந்திரத்தைப் பெற உதவிபுரிந்தது.

சுவாமிகள் திருக்கோணமலையி லிருந்தபொழுது திருக்கோணேசுவராலயத்தையும் அதனுடைய சுற்றாடலையும் புனிதநகராகப் பிரகடனஞ் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்பதற்காக இந்துக்களுடைய மாபெருங் கூட்டமொன்று நடைபெற்றது.

கூட்டம் நடைபெறமுன் நிகழ்ந்த ஊர்வலத்தில் இராவணனுடைய உருவமொன்று மக்களால் காவிச் செல்லப்பட்டமையை சுவாமிகள் கண்டித்துப் பேசினர். ஈழநாட்டில் சமயம், பாஷை, பிற அரசியலுரிமைகள் சம்பந்தமாக மக்களுக்கிடையில் ஒற்றுமைக் குறைவு காணப்படுகின்றது. ஈழநாட்டுத் தலைவர்களுக்கு அவ்வவர்களுடைய சமயக் கடவுள்களும் சமயத்தலைவர்களும் நல்லறிவுச்சுடர் அளிப்பார்களாக. நான் எனது என்ற செருக்கற்று மக்கள் யாவரும் இறைவனுடைய குழந்தைகள் என்ற எண்ணம் அவர்களுக்கு உதித்தல்வேண்டும். இவ்விதமான நல்லெண்ணம் அவர்களுக்கு உதித்தால் நாட்டில் சமயத்துவேஷமும் பாஷைத் துவேஷமும் அற்றுப்போகும். நாட்டில் மக்கள் இன்பமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வார்கள்,"

சிந்தியுங்கள் செயலாற்றுங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பசுக்களை இடருறுத்தவுங்கூடாதுஎன்றார் நாவலர். ஆனால் பசுக்களைக் கொன்று தின்றுவிட்டு — தின்னவிட்டுவிட்டுத் — தின்போருக்கு மேலும் உதவி செய்து கொண்டு — தின்போரைக் கண்டியாது வாளா வாழ்ந்து கொண்டு நாவலருக்குச் சிலை எடுக்கின்றோம் — அவர் கூறிய வழியில் வாழ்ந்தோம் — வாழ்வோம் — வாழ்கின்றோம் என்று கூறுதல் முறையா? சிந்தியுங்கள்.

ஆகவே சிலையமைக்கத் துரித முயற்சி செய்வதோடமையாது "பசுவதை" யகற்றவும் முயற்சி செய்து வெற்றி கண்டு இரு நற்பெருங் காரியங்கட்கும் ஒரே நாளிற் திறப்புவிழா கொண்டாட முற்படுவீர்களாக.

யாழ் நகரமக்களே சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்தியுங்கள்; தெளிவுறுங்கள்; இன்றே ஆவன புரிய முற்படுங்கள்; வெற்றி உமதே!

காரைநகர்.

— காரைநாடன்

அடியார் பெருமை அளப்பரிதே

[சுவாமி ராமதாஸ் Bhavan's Journal]

[தகவல்: திரு. ம. இ. சிதம்பரப்பிள்ளை]

ஒரு கிராமத்தில் ஒரு விஷ்ணுபத்தன் இருந்தார். அநேக காலம் விவாகமாகியும், ஆண்டவனை வேண்டிப் பலகால் விரதங்கள் அனுட்டித்தும் பிள்ளைப் பேறு இல்லாது துயருற்றார்.

திரிலோக சஞ்சாரியாகிய நாரதமாமுனிவர் அக்கிராமத்தினூடாக ஒரு நாள் சென்றார்.

விஷ்ணு பத்தன் மாமுனிவரைக் கண்டு, வணங்கி அவர் எங்கு செல்கின்றார் என வினவினார். அதற்கு அவர் வைகுந்தம் போவதாகக் கூறினார். "விஷ்ணு பகவானிடம் தனக்கு ஏன் புத்திரபாக்கியம் கொடுக்கவில்லையென்பதையும் எப்போது அதனை எண்ணியிருக்கின்றார் என்பதையும் கேட்டறிந்து" வருமாறு முனிபுங்கவரை வேண்டினார்.

நாரத மாமுனிவர் வைகுந்தம் அடைந்ததும் பத்தனின் குறைபாட்டைப் பற்றி பகவானிடம் கூறினார். அதற்கு ஆண்டவன் "விதியின் பிரகாரம் அப் பத்தனுக்குப் புத்திர பாக்கியம் இப்பிறவியில் இல்லை" என்று பதில் அளித்தார்.

திரிலோக சஞ்சாரி, இத் துன்பச் செய்தியை, விஷ்ணு பத்தனுக்குத் தெரிவிக்க விரும்பவில்லை.

பல வருடங்கள் கழிந்துவிட்டது. நாரத மாமுனிவர் ஒரு நாள் பத்தன் குடியிருக்கும் வீட்டுப் பக்கமாக வந்தார். விஷ்ணு பக்தனைக் கண்டார். மூன்று குழந்தைகள் வீட்டு முற்றத்தில் நின்று விளையாடுவதைக் கண்டு அவர்கள் பக்தனுடைய பிள்ளைகள் என்பதனை அறிந்து அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தார்.

பக்தனுக்கு எவ்வாறு பிள்ளைப் பாக்கியம் உண்டாயிற்றென்பதனை அறிவதற்கு வீணாகான முனி விரும்பினார். பக்தனையும் கேட்டுக்கொண்டார்.

பக்தன் நாரத முனிவரைப் பார்த்து, "சகல உலகங்களுக்குஞ்சென்று அங்கே நடைபெறுபவைகளுக் கெல்லாம் சாட்சியாக விளங்கும் தங்கட்கு இதுதெரியாததல்லவே! இருந்தும் சொல்லுவேன்! நீங்கள் வந்து போன பின் ஓர் அடியவர் இங்கு எழுந்தருளினார். அவரைத் தரிசிக்கவும், அவருக்கு சேவை புரியவும், பாக்கியம் பெற்றேன். அவர் என்மேல் பரிந்து "என்ன வேண்டும்?" எனக் கேட்டார். புத்திர பாக்கியம் அற்றவனாக உள்ளேன் அதனை நீக்கியருள வேண்டும் என்று மன்றாடினேன். ஒரு மகவல்ல மூன்று பிள்ளைகள் வேண்டும் என்று கேட்டேன்.

இதனைக் கேட்ட நாரதமுனிவர் நேராக வைகுந்தம் அடைந்து மாயவனைப் பார்த்து நடந்தவற்றைச் சொன்னார் சில வருடங்கட்கு முன் அப்பத்தனுக்குப் பிள்ளைப்பேறுண்டோ எனக் கேட்டபோது அவனுக்கு மக்கட்பேறு கிடையாது என்றீரே! சுவாமி அவனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்துள்ளார்களே! இதற்கு உமது உத்தரம் யாதோ?" என்றார்

விஷ்ணு பகவான் சிறிது நகைத்து அப்படி நடந்திருந்தால் அது அடியார்களின் பெருமை காரணமாயிருக்க வேண்டும். விதியை மாற்றக்கூடிய வல்லமை அடியார்கட்கே உண்டு." என்றார்.

"தொண்டர்தம் பெருமை
கூறவும் பெரிதே!'

ஆதீனத்திற்கு அன்பளிப்பு

யாழ் நல்லை மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு நல்லூர்ச்சிவன் கோவிலுக்கு அண்மையிலுள்ள மழவராயர் மடம் ஷை ஆதீனத்தின் சமயப்பணிகள் விரிவு பெற ஆக்கமளிக்கும் முகமாக அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

உ
சிவமயம்

சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சை விதிகள்

1. இப்பரீட்சைகள் ஆண்டுதோறும் ஆவணித்திங்களில் நடைபெறும்.
2. வைகாசித்திங்கள் முடிவதற்கு முன்னர் உரிய மாதிரித் தாளில் "தேர்வுச் செயலாளர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு கட்டணப் பணத்துடன் பதிவுசெய்து விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.
3. கட்டணம்: இளஞ் சைவப்புலவர் ரூபா பத்து; சைவப்புலவர் ரூபா பதினைந்து.
4. தேர்வுக்குத் தோற்றமுடியாதவர் அடுத்த ஆண்டு அதே தேர்வுக்கு ரூபா ஐந்து செலுத்தி உரியகாலத்தில் விண்ணப்பிக்கலாம்.
5. தகுதி: சைவாசாரமுள்ளவராயிருத்தல் வேண்டும். இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு எவரும் தோற்றலாம். சைவப்புலவர் தேர்வுக்கு இளஞ்சைவப்புலவர், பாலபண்டிதர், பண்டிதர், பல்கலைக்கழகப் பட்டதாரி, வித்துவான், ஆசிரியர் ஆகியோர் தோற்றலாம்.
6. சித்தி: ஒவ்வொரு பாடத்திலும் 30 வீதத்திற்கு குறையாத புள்ளிகள் பெற்று மொத்தத்தில் 70 வீதத்திற்கு மேற் பெறுவோர் முதற் பிரிவினராகவும் 50 வீதத்திற்கு மேற் பெறுவோர் இரண்டாம் பிரிவினராகவும் 35 வீதத்திற்கு மேற் பெறுவோர் மூன்றாம் பிரிவினராகவும் சித்தி பெறுவர்.
7. ஏதாவதொரு பாடத்திற் சித்தி யெய்தாதுவிடின் நூனசித்தி வழங்கப்படும் அப்பாடத்தை ஒரு முறை எடுக்க வாய்ப்புண்டு.
8. பாடம் ஒன்றில் 75 புள்ளிகளுக்கு மேலே பெற்று அப்பாடத்தில் முதலாவது இடம் பெறுகின்றவர்க்குப் பரிசு வழங்கப்பெறும்.
9. பரீட்சை முடிவுகள் தேர்வு முடிந்து முத்திங்களுக்குள் வெளியிடப்படும்.
10. பரீட்சைபற்றிய அறிவித்தல்கள் காலத்திற்குக் காலம் சபைவெளியீடாகிய இந்துசாதனத்தில் வெளிவரும். பதில் வேண்டுவோர் முத்திரையொட்டிய தபாலுறை அனுப்புதல் வேண்டும். கைவசமிருக்கும் பழையவினாத்தாள் ஒரு தொகுதி விலை ரூபா ஒன்று.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 21-9-68.

க. கணபதிப்பிள்ளை
தேர்வுச் செயலாளர்.

காந்தியடிகளுடைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறவி ஒருவர் காந்தியடிகள் விழாவின் ஆரம்ப உரையை நிகழ்த்தத் திருவருள் கூட்டி வைத்திருக்கின்றது" இவ்வாறு தலைவர் தமது முன்னுரையில் கூறினார். அதன் பின்பு சுவாமியவர்கள் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட விரிவுரையை இனிய ஆங்கில நடையில் சிறப்பாக நிகழ்த்தினார். அவருடைய பேச்சின் சாரத்தினை இப்பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். கூட்ட முடிவில் உயர்தர வழக்கறிஞர் திரு. எஸ். சூரசங்காரம் அவர்கள் சுவாமிகளுக்கும் தலைவருக்கும் சபையாருக்கும் நன்றி கூறினார். சுவாமிகளுடைய சொற்பொழிவுகள் ஷை மண்டபத்தில் தினமும் 9-10-68 வரை நடைபெறுமெனவும் தெரிவித்தனர்.

காந்திஜயந்தி விழா

2-10-68 அன்று யாழ்ப்பாணமத்திய கல்லூரித் தமிழ மன்றம் மகாத்மாகாந்தியின் பிறந்ததினத்தைக் கொண்டாடியது.

தலைமை வகித்த ஆசிரியர் திரு. சன்முக. குமரேசன் "உண்மையின் உருவாகவும் அன்பின் இருப்பிடமாகவும் தியாகத்தின் சின்னமாகவும் விளங்கிய மகாத்மாகாந்தி தென்னுபிரிக்காவில் இந்தியருக்காக-சிறப்பாகத் தமிழருக்காகப் பாடுபட்டார். டலரும் கொண்டாடும் இவ்வேளையில் தமிழர்கள் இவ்விழாவைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமுடையது திருவள்ளுவர் குறிப்பிட்டபடி வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் அண்ணல் காந்தி. அண்ணல் 1927-ம்ஆண்டு மத்திய கல்லூரியிற் காலெடுத் வைத்தார்" என்று கூறினர்.

செல்வன் சி. சுதந்திரராசா 'காந்திநெறி' என்னும் பொருளிற் பேசி "மனிதநெறி பகுத்தறிவுளநெறி' காந்திய நெறி உயர்ந்த மனிதநெறியே" என்றும் குறிப்பிட்டார்.

திரு. இ. கந்தையா 'வாழ்விக்க வந்த காந்தி' என்னும் பொருளில் உரை யாற்றுகையில் "கிராமங் களிலுள்ள மக்களை முன்னேறச் செய்தாலன்றி இந்தியா முன்னேருது வெறும் பழைய நாணயம் ஒன்றையும் கம்பி ஒன்றையும் சேர்த்துத் 'தக்ளி' அமைத்துப் பின் சற்றுத் திருத்தமுள்ள 'ராட்டை' செய்து நூல் நூற்ருர் மகாத்மா இச்செயலைக்கண்டு பெரிய நெசவுத் தொழிற்சாலைகள் உள்ள இங்கிலாந்து நடுங்கியது. கிராமமக்கள் தங்கள் வீடுகளிலிருந்தே நூல் நூற்கச் சுதேசத் துணி இயக்கம் வளர்ந்தது.

நாடகங்களைப் பார்க்கும் சிறுவர்கள் பல எண்ணங்கள் எண்ணுகிருர்கள். ஆனல் மகாத்மாகாந்தி 'அரிச்சந்திரன்' நாடகத்தைப்பார்த்ததும் ஏன் ஒவ்வொருவரும் அரிச்சந்திரனைப்போல் உண்மையைப் பேணக்கூடாது? என்றகேள்வியை எழுப்பி உண்மையைத்தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார் உலகத்துக்கே உரிய இம்மகானைப் பற்றி எத்தனையோ நூல்கள் எழுந்திருக்கின்றன. அவற்றைப்படித்து மாணவசமுதாயம் முன்னேறுவதாக'

செல்வி கிரிஜா குமாரசாமயும் செல்வி வசந்த குமாரி குமாரசாமியும் "மகாத்மா காந்தி ஏழைகள் நேசன்" என்ற கருத்தடைய பாடலொன்றைப் பாடினர்கள் செல்வன் கா. நகுலேசன் நன்றிதெரிவித்தார்.

சரஸ்வதி பூசை

30-9-68-ல் நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலை இந்துமா மன்றத்தினர். ஷைமன்றத் தலைவர் திரு. கா. துரைராசசிங்கம் தலைமையில் சரஸ்வதி பூசை நடத்தினர். அன்று விசேட பூசைகளும் கலை நிகழ்ச்சிகளும் கதாப்பிரசங்கங்களும் நடைபெற்றன

கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னையா சின்னத்துரையும் பெண் பராசக்தியும்
25, சிவன்பண்ணை வீதி கொட்டடி யாழ்ப்பாணம்.
இல M.B, 8956 எதிராக

1. கதிரிப்பிள்ளை பொன்னுத்துரையும் பெண்
2, முத்தாபரணமும் உரும்பிராய் யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8956 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்துள்ள கோட்டுக் கட்டளையின்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை (19-10-68) முற்பகல் 10 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3300/-ம் 20-3-67 தொடக்கம் 14-12-67 வரைக்கும் ரூபா 2500/ க்கு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 312/20 சதம்

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்கோயிற்பற்று கோப்பாய் தெற்குஇறை 'கொட்டனுல் கூயும் மறுபிரிவுகளும்' நில ப 24½ இதல் தங்களது சொரியல் பங்குக்காக குறிப்பிட்ட கதிரிப்பிள்ளை பொன்னுத்துரைக்கும் பெண் முத்தாபரணத்துக்கும் வடமேற்குப் பக்கமாகப் பிரிக்கப்பட்ட நில பர 20 ஆட்டையிலிருந்து இந்த நில பர 20ல் மேற்குப்பக்கமாகப் பிரிக்கப்பட்ட நில ப10 இந்த நில,ப 10 செய்பயிர்வான்பயிர்களும் இதிலிருக்கும் கிணற்றில்பங்கும் எல்லை கிழக்கு கதிரிப்பிள்ளை பொன்னுத்துரைக்கும் பெண் முத்தாபரணத்துக்குமுரிய மிகுதி ஆதனம் வடக்குத் தெரு மேற்கு வீரகத்தி தம்பையாவின் உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு சின்னத்தம்பி பொன்னையாவில் உரிமைக்காரரின ஆதனம். (பதிவு இலக்கம் K. 241/278

9, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

சு. கந்தசாமி,
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்
310 3 10-68.

கோட்டு விற்பனவு விளம்பரம

காரைநகர் கிழக்கு ஆறுமுகம் தில்லையம்பலம் பெண் காலஞ்சென்ற இராசம் சவின ஆஸ்தியின் பேரில் காரைநகர் கிழக்கு ஆறுமுகம் காசிப்பிள்ளை கைம்பெண் சின்னம்மா —தத்துவகாரி.
இல 1988 Testy.

எதிராக

காரைநகர் கிழக்கு தற்போது நாவலப்பிட்டி, கொத்மலை இல. 34
1 ஆறுமுகம் தில்லையம்பலம்
காரைநகர் கிழக்கு 2 காசிப்பிள்ளை இதம்பரப்பிள்ளை (பராமரிப்பற்றவர்)
3 கந்தர் இராமு 2-ம் எதிரவாதியின் பராமரிப்புக்காரன் — எதிர்வாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1988-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணிகள் 1968-ம் ஒக்டோபர் (ஐப்பசி) மீ 23-ந் தி (23-10-68) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று களபூமியிறை 'தம்பண' நெற்பரப்பு ஐந்து [5-ம]. எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை ஆறுமுகத்தின் ஆதனம். வடக்கு சண்முகம் ஆறுமுகத்தின் ஆதன . மேற்கு ஆறுமுகம் கனகசபையின் ஆதனம. தெற்கு குமாரசாமி கைம்பெண் சரஸ்வதிக்கும் வேலுப்பிள்ளை ஆறுமுகத் திற்குமுரிய ஆதனம் இதடங்கலும்

2 மேற்படி களபூமியிறை "விலாலை" நில பர. ஐந்து [5-ம] குளி 9 ம எல்லை கிழக்கு கிராமச்சங்க ஒழுங்கை வடக்கு சங்கரப்பிள்ளை விசுவநாதனின் ஆதனம். மேற்கு சுந்தரம்பிள்ளை பெண் பரமேஸ்வரிக்குரிய ஆதனம் தெற்கு கையொழுங்கையும் சுந்தரம்பிள்ளை பரமேஸ்வரிக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை. 20-8-1968 Commissioner & Valuer,
(எம். 210 4-10-68)

யாழ்ப்பாணம்

—ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலய மூலம் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

கட்டுடை மானிப்பாய் 1 சின்னத்தம்பி கனகசபை
2 பெண் மங்கையற்கரசி
— வழக்காளிகள்.
கட்டுடை மானிப்பாய் 1 முத்துத்தம்பி கருணனந்தனும்
2 பெண் வசந்தாதேவி
— பதில் வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம் 1. ஜோன் ஏனஸ்ற் பிரெடரிக் ஆசீர்வா
தற்சமயம் இலண்டன 95 பிரதானவீதி யாழ்ப்பாணம் இவரு
டைய தத்துவகாறன் அல்பிரட் எட்வேட் தம்பர்,
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 5088-ம் இல
வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைபடி, பின்னுல் வி
ரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968 ஆம் ஆ (கார்த்திகை
மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 30 மணி தொடக்க
அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்

தீர்வைத்தொகை ரூபா 6660/- இதில் ரூபா 4500/-
21-9-62 திகதி தொடக்கம் 10-9 65 திகதிவரைக்கும 12 வீ
வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுப்படும்வரைக்கு
5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 200/- முதல் கணக்கா
ரூபா 1000/- கொடுக்கப்பட்டது.

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி
கோவிற்பற்று கரையூர் இறை பிறையடிவளவு நில ட 4
14½ செய்பயிர்களும் எல்லை கிழக்கு E R T சதாசிவசிங்க
முரிய ஆதனம் ஜோன் மாட்டின் உருத்தாளர்களுக்கும் நிகலஸ்
கைம்பெண் மேரிப்பிள்ளைக்கும் காலஞ்சென்ற றபேட் ராஜ
னம தம்பரின் உருத்தாளர்களுக்கும் உரிய ஆதனமும் மேற்
டேவிட் ரூட் தெற்கு ஜேம்ஸ் ஜோசேப் திசவீரசிங்கி பெ
செலீனு தங்கக்குட்டிக்கு உரிய ஆதனமும் தற்போது
பாம்பிள்ளை சீமாம்பிள்ளை செல்லத்துரை கைம்பெண் பிர
சீஸ்க்காவுக்கும் மேதறுப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை கைம்பெ
முத்தம்மாவுக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும் விற்கப்படு

ந. ஆறுமுகம்,
சித்தன்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரு
30-9-1968 எம் 216. 4-10-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M B.9187
1. இராமநாதன் திருநாவுக்கரசும் பெண்
2. பார்வதிதேவியும் – இல 316 நல்லூர் வீதி நல்லூ
யாழ்ப்பாணம். வழக்கா

எதிராக

1. சின்னையா விசுவலிங்கம் 43 கனகரத்தினம் வீ
யாழ்ப்பாணம். எதிரா

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 9187 –
இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி
பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ம் ஆ
கார்த்திகை மீ 13-ம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 ம
தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தி
விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 9340/-
24-6-67 தொடக்கம் 25-11-67 வரைக்கும் ரூபாய் 7500/-
12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்
வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 352/40-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகு
நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "நாயன்மார்குள
தெறப்புலம் வயல் மேட்டுவயல" நாயன்மார்குளம் தெற
மேட்டு வயல" நில. பர 5-ம 14, 47/50 கு
யும் அதற்குள் அடங்கிய கல்வீடும் கிணறும் பயிர்களும், எல்
கிழக்கு வீதி வடக்கு சதாசிவம் செல்கதாசத்துக்கும் மனைவிக்கு
உரிய ஆதனம், மேற்கு செல்லையா பெண் அன்னப்பிள்ளையி
ஆதனம், தெற்கு வெற்றிவேலு கந்தையாவின் ஆதன
இதடங்கவும். Regd in D 25/258

அ எட்வேட்.
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை கொமிஷனர், & விலைமதிப்பாள
21-10-68 எம், 219 4-10-68

தேகவியோகம்

சிவநெறிச் செல்வர் திரு மு சிவப்பிரகாசம் அவர்கள் 2-10-68ல் அன்று சிவபதமடைந்தார். அவர் சுழிபுரத்திலுள்ள பரம்பரையான சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அக்கிராமத்திலுள்ள அறுபத்துமூவர் மடத்தில முறையாகக் குருபூசைகள் புராண படனம் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்கு செய்து வந்தனர் திருமுருக கிருபானந்த வாரியாரை யாழ்பாணத்துக்கு முதன் முதல் அறிமுகம் செய்ததும் இவரே. இவ்வருடமும் அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைக்க கூடிய ஒழுங்குகளை புரிந்து கொன்டிருந்தார். அவருடைய சமயத் தொண்டினை புரிவதற்கு இனியார் முன்வருவார் ரென்றகவலையை அவருடைய பிரிவு உண்டாக்கி விட்டது அவருடைய பிரிவினல் துயருறும

புதிய அரசாங

அதிபர்

யாழ், மாவட்ட அரசா
அதிபர் திரு. வேர்ண
அபய சேகரா அவர்க
தபால் மா அதிபராக நிய
னம் பெற்றிருப்பதால் நு
ரெலியா அரசாங்க அதி
திரு எவ் சி பீட்டர்ஸ் நவ
பர் மீ முதலாம் திகதி யா
அரசாங்க அதிபராகப் பத
ஏற்ருர்.

ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆ
லப் பத்திரிகைகளின் சந்தா
ரரைத் தங்கள் சந்தாப்பணத்
திலுவையின்றி செலுத்தும் வ
ணம் விநயத்துடன் கேட்
கொள்ளுகின்ருேம். மனேஜர்

அவருடைய மனைவி பிள்
கள் மற்றும் சுற்றத்தவர்
ளுக்கும் எமது அநுதாப
தைத் தெரிவிக்கின்ருேம்.

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு நெடுங்காடு சயம்புவீதி திரு அருணசலம் தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1967-ம் ௵ யூலை மீ 1-ஆந் திகதிக்கு (1-7-67) முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவுகள் 1968-ம் ௵ அக்டோபர் மீ 30 உ (30-10-68) புதன்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் ஷெ அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
M. 211. 4. 11-10-68.

"இராசகிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம் 18-9-68.

Commission Sale
கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இலக்கம்: 8906

1 கரணவாய் வடக்கு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
2 பெண் பரமேஸ்வரி —வழக்காளிகள்.

எதிராக:

1 இமையாணன் செல்லையா சிதம்பரப்பிள்ளை —எதிராளி.

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் 1-ம் 2-ம் 3-ம் ஆதனங்களை 968-ம் ஆண்டு கார்த்திகை மீ 9-ம (9-11-68) திகதியிலும் 4-ம் ஆதனத்தை கார்த்திகை மீ 10-ந் திகதியிலும் முறையே (சனி, ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9-30 மணியளவில் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

1 உடுப்பிட்டி இறை அலையத்தான் தோட்டம் நில, பர 11 3/4. ஆறுன் ஆட்சிப்படி இலா. 12 3/4. இதில் பிரிவிடலாட்சிப்படி கிழக்குப் புறமாக நில. பர. 5 ல பிரிவிடலாட்சிப்படி நில. பர. 2 குளி 8 1/4. இதில் பிரிவிடலாட்சிப்படி நில பர 1 குளி 4 7/8 இதில் தெற்குப் புறமாக குளி 1 1/2 நீக்கி மிகுதிக்கு நில. பர. 1 குளி 3 3/8. எல்லை கிழக்கு செல்லையா இளையதம்பி மருநாமம் சாமிக்குடைய வாதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு ஐயாச்சாமி பெண் வள்ளிப்பிள்ளைக்குடைய வாதனம், தெற்கு பின்சொல்லப்படும் 2-ம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கல்வீடு குசினி மற்றும் செய்பயிர் வான்பயிர் அடங்கலும் பெறுமதி ரூபா 11,000/-

2 ஷெ இறை அலையத்தான் தோட்டம் நில பர. 2 குளி 8 1/4 ல மேற்குப் புறமாக நிரந்தமான நில பர. 1 குளி 4 7/8. இதில் தெற்குப்புறமாக ஒழுங்கைப் பாவிப்புக்காக விடப்பட்ட நிலம் குளி 1 1/2. எல்லை கிழக்கு செல்லையா இளையதம்பி மருநாமம் சாமிக்குடைய வாதனம். வடக்கு மேற்சொல்லிய 1-ம் ஆதனம். மேற்கு கைபொழுங்கை. தெற்கு செல்லையா செல்லத்துரை பெண் பசுபதிக்குடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டவை யடங்கலிற் சேரியலாய் அரைவாசியும். பெறுமதி ரூபா 150/-

3 ஷெ மாகாணம் ஷெ டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோயிற்பற்று நீர்வேலி இறை ஒலுகோடை நில பர. 11. ஆட்சிப்படி 12 1/2. இதில் ஒழுங்கைக்காக 1/4 பரப்பு நீக்கி மிகுதியில் கிழக்குப்புறமாக மூன்றிலொரு பங்குக்கு நில பர 4 குளி 1 1/2. இதில் வடக்குப்புறமாக நில பர. 1 குளி 3/8 நீக்கி அதற்கடுத்த தெற்குப்புறமாக நில பர. 1 குளி 3/8. எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு செல்லையா இளையதம்பி மருநாமம் சாமிக்குடைய வாதனம். மேற்கு சிதம்பரி இன்னத்தம்பிக்கும் மருபேருக்குமுடைய ஆதனம். தெற்கு செல்லையா அருணசலத்துக்குடைய வாதனம். இதடங்கலும் பெறுமதி ரூபா 5000/-

4 ஷெ பச்சிலைப்பளி கரைச்சிப்பகுதி முரசுமோட்டை இறை முரசுமோட்டைக்காடு ஏக்கர் 16. ஏக்கர் 1, ஷெ ஏக்கர் 2 1/2. கூடிய ஏக்கர் 19 1/2. கிணறும் எல்லை கிழக்கு கனகராஜதயாவல ஆறு. வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்குடைய வாதனம். மேற்கு வாய்க்கால். தெற்கு ஆழ்வாப்பிள்ளை மாணிக்கத்துக்கும் பெண் பூரணத்துக்குமுடைய ஆதனம் இதடங்கலிற் சேரியலாய் ஏக்கர் நாலேமுக்காலும் பெறுமதி ரூபா 2000/-

தீர்வைத்தொகை ரூபா 11,975-00. ரூபா 10,000 க்கு 6 வீத வட்டி 22-11-65 தொடக்கம் 28-5-66 வரை ரூபா 411-62. ரூபா 12,386-62 க்கு 5 வீத வட்டி 29-5-66 — 7-8-67 ரூபா 734-59, செலவு தொகை ரூபா 303 98. கட்டவேண்டிய தொகை ரூபா 13,425-19.

	13418 78
கட்டிய தொகை	6000 00
	7418 78
ரூபா 7418 78 க்கு 19-1-68 தொடக்கம் 15-8-68 வரை 5 வீத வட்டி	216 37
கோட்டுச் செலவு	303 98
	7,939 13

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
30-9-68

கா. முத்துகுமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer & Licensed Auctioneer
எம் 213. 4-10-68

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 4—10—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

பொன்னையா நடராசா இல 42 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் தற்போது மண்டபம் கம்ப் வழக்காளி
இல P/ 540 எதிராக

1 பொன்னையா பாலசுப்பிரமணியம். அராலி கிழக்கு
2 அமரசிங்கம் அழகரத்தினமும்.
3. பெண் விஜயலச்சுமி இருவரது விலாசம் இறகரி வீதி பதுளை
4. A.E பொன்னையாவின் புத்திரி ராஜெஸ்வரி அரசாங்கப் பாடசாலை அனலைதீவு
5. A.E பொன்னையாவின் புத்திரி புஸ்பாவதி இறகரிவீதி பதுளை
6. தியாகராஜா அருணசலம், கொக்குவில்
7. தியாகராஜா சிவசுப்பிரமணியம் வண்ணார்பண்ணை கிழக்கு தற்போது ஆஸ்பத்திரி கிளிநொச்சி
8. ராமு கிருஷ்ணபிள்ளை ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
9 வைத்திலிங்கம் ஆனந்தநடராஜாவும்
10 பெண் கமலாவதி இவரது விலாசம் நாவலர் கோட்டம் வண்ணார்பண்ணை தற்போது 93/10 குமாரசாமிவீதி யாழ்ப்பாணம்
11. பொன்னையா இரத்தினகோபால் புகையிரதக்கடவை ஒழுங்கை சிராம்பியடி யாழ்ப்பாணம் தற்போது ஆஸ்பத்திரி கிளிநொச்சி
12. சுப்பிரமணியம் நடராசா வண்ணார்பண்ணை கிழக்கு
13. அருணசலம். தம்பிப்பிள்ளை காரைநகர்
14. பொன்னம்பலம் ராமநாதன். காலபூமி காரைநகர்
15. இழுகுப்பிள்ளை ஆசையின் கைம்பெண் தங்கச்சிப்பிள்ளை மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
16. M.S.இரத்தினசபாபதியின் கைம்பெண் தங்கமுத்து உடுவில்
17. சுப்பிரமணியம் கனகசபை வண்ணார்பண்ணை கிழக்கு
18 S.குமாரசாமி ரங்கநாதனும்,
19. பெண் புவனேஸ்வரி இருவரின் விலாசம் உரும்பிராய்
20 செல்லத்துரை சுப்பிரமணியத்தின் கைம்பெண் மனோன்மணி கொட்டடி வண்ணார்பண்ணை மேற்கு
21. கார்த்திகேசு சுப்பிரமணியமும்.
22. பெண் தேவமணி இருவரின் விலாசம் வண்ணார்பண்ணை கிழக்கு
23. சண்முகம் கதிரவேற்பிள்ளை துரைசிங்கம் சண்டுகுளி
24 சுப்பையா பொன்னம்பலம் கந்தையா வண்ணார்பண்ணை கிழக்கு எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் P /540 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ம் ௵ கார்த்திகை மீ 18-ம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணி (18-11-68) தொடக்கம் அந்தக்காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்கிழக்கு ஸ்டான்லி வீதி யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 14-ம் வட்டாரம் "ஊமைவயல், பிள்ளைப்புலம், தலைமடை, பனங்காடு, உவாயடி, உமாவயல், சவித்துப்பிள்ளைக்குளம், தலைமடை" கிலப 0 குளி 9,605 உத்தரவுபெற்ற உலாந்தா C.C குமாரசாமி அவர்களால் 16—7—67-ல் தயாரிக்கப்பட்ட 294-ம் இலக்கப்படத்தில் இரண்டாம் துண்டு எல்லை கிழக்கு குறிக்கப்பட்ட படத்தில் மூன்றும் துண்டு வடக்கு சண்முகத்தின் ஆதனம். மேற்கும் தெற்கும் குறிக்கப்பட்ட படத்தின் ஏழாம் துண்டு. குறிக்கப்பட்ட துண்டு 3-ம் 4-ம் 5-ம் 11-ம் 12-ம் எதிரிகளுக்குச் சமபங்காகக் கொடுபட்டிருக்கிறது. இடைத்தீர்வையில் 11-ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட இடைத்தீர்வைப் பந்தியிலும் கடைசிப் பிரிவிடுதல் தீர்ப்பிலும் குறிப்பிட்டபடி இத்துண்டை விற்கும்படி சொல்லப்பட்டிருக்கின்றது.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
26-9-68 ம்எ 215

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
4—10—68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வட்டுக்கோட்டை கந்தமுத்து சிவசிதம்பரம். வழக்காளி
இல. M.B / 4448 எதிராக

காலஞ்சென்ற 1 சங்கானை மேற்கு கார்த்திசினி.
காலஞ்சென்ற 2 ஷெ யூர் பெண் தெய்வானை எதிராளிகள்
3. சங்கானை மேற்கு கார்த்தி அப்புக்குட்டி முதலாம் எதிராளியின் ஆதனங்களின் பராபரிப்புக்காரன்.
4. சங்கானை மேற்கு லெட்சுமணர் கைம்பெண் சின்னப்பிள்ளை அல்லது வள்ளியம்மை - 2-ம் எதிராளியின் ஆதனங்களின் பராபரிப்புக்காரி.

பதில் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4448-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி என்னால் 1968-ம் ௵ (ஐப்பசி) மீ 29 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 3165/00 ம் ரூபா 2400/00 க்கு 15-12-61 தொடக்கம் 7-6-62 வரை 10 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு 341/75 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவில் பற்று சங்கானை மேற் இறை 'மன்னக தோட்டம்" கில.ப ஆறு (கிலப 6) வீடும் குசினியும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் பிள்ளைக்குட்டிக்குரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்குக் கையொழுங்கை தெற்கு முருகர் கிருஷ்ணருக்கும் பெண் தங்கமுத்து விற்கும் பங்காளர்கட்குமுரிய ஆதனம் இதன் பதிவு யாழ்ப்பாணம் காணிக்கந்தோர் E. 332/23

காரைநகர், 1968-ம் ௵
புரட்டாதி மீ 11 உ

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
(எம். 214 4-10-68)

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

பிரிவிடுதல் நோத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில்

1. பொலிகண்டி தம்பையா சதாசிவமும்
2. பெண் தெய்வானைப் பிள்ளையும் —வழக்காளிகள்.

எதிராக

இல. 9955

1. பொலிகண்டி O. ஆறுமுகம் மகன் சின்னப்பிள்ளை
2. ஷெயூர் V. சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை
3. ஷெயூர் K. சண்முகம் சின்னையா —எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று பொலிகண்டியிறை வண்ணான் தெணி தோட்டக் 2. ஷெ கி பர 43, 7/8 ஷெ கி பர 54, 3/8 இதில் நடுப்பெற கிலபர 12 ல் மேற்குப் புறமாக கி பர. 8. என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1968-ஆம் வருடம் ஐப்பசி மீ 8 உ காலை 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
செ. யோ. நவரட்டினம்
சக்கிடுத்தார்
1968-ம் ௵ புரட்டாதி மீ 16உ
எம் 212 (4-10-68)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. A. 960

1. சின்னப்பு, கதிரேசவும்
2. பெண் தங்கரத்தினமும்.
மயிலிட்டி வழக்காளிகள்

எதிராக

தையிட்டி
1. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 2. கந்தையா நடராசா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் A. 960-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1968-ம் வருடம் நவெம்பா மாதம் 10-க் திகதி 10-11-68 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 8012-75 ம் 2-12-1966 தொடக்கம் இறுபடும் வரைக்கும் ரூபா 100/க்கு 9% வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 334-02 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மைலிட்டி கோவில்பற்று தையிட்டி இறை ஆவளை கில ப 2-ம் குளி 6-ம் பனைகளும், தென்னைகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லையில் நிற்கும் வேம்புகளிற் பங்கும் இதற்செல்லை கிழக்கில் ரோட்டும் வடக்கு மயிலிட்டி ஊரெல்லை மேற்கு வெள்ளவாய்க்கால் தெற்கு வல்லிபுரம் சிவகுருவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் இடங்களும் இதற்குரியவைகளும்.

செ. இரத்தினசபாபதி J.P.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் 29-9-68.
(எம். 217 4-10- 8)